Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 360

செவ்வாய்க்கிழமை 21 நவம்பர் 2023

கார்த்திகை 05 ஆம் நாள் – வள்

## சித்தன்கேணி இளைஞன் சித்திரவதையாலேயே சாவு!

சிறுநீரகம் செயலிழப்பு

உடற்கூற்றுப் பரிசோதனையில் அம்பலமானது பொலிஸின் அக்கிரமம்

யாழ்ப்பாணம், நவ. 21
நீதிமன்றின் உத்தரவில் கட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் கடுமையாக அடித்து துன்புறுத்தப்பட்டதால் சிறுநீரகம் பாதிப்புக்குள்ளாகியே உயிரிழந்தார் என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. »11

## நீதி நிலைநாட்டப்படும்வரை தொடர்ந்து குரல்கொடுப்போம்



சந்தேகநபர் உயிரிழந்த விவகாரம் தொடர்பில் முன்னாள் எம்.பி. சரவணபவன் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 21
பொலிஸாரின் சித்திரவதையால் இளைஞன் உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் தற்போது எழுந்துள்ள அழுத்தங்கள், அந்த விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படும் வரையில் »11

## மாவீரர் வாரம் ஆரம்பம்: மாவீரர் நினைவாலயம் நல்லூரில் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 21
1982ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வரையான காலப் பகுதியில் தாயக மண்ணின் விடியலுக்காக வித்தாகியவர்களில், விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்த 24 ஆயிரத்து 379 மாவீரர்களின் பெயர்களை உள்ளடக்கிய கல்லறைகளையும், தகவல்களையும் மாவீரர்களின் நினைவாலயம் மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாளான இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் நல்லூர் தியாக தீபம் நினைவுத்தூபிக்கு முன்பாகத் திறந்து வைக்கப் படவுள்ளது. (அ–ஓ–66)

சந்தேகநபர் உயிரிழப்பு:

## வட்டுக்கோட்டை பொலிஸார் 2 பேருக்கு பணியிடமாற்றம்

ஒருவர் தமிழர்

யாழ்ப்பாணம், நவ. 21
வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய இரு பொலிஸார் உடன் நடைமுறைக்கு வரும் வகை »11

வட்டுக்கோட்டை

## பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு




யாழ்ப்பாணம், நவ. 21
யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. சந்தேகநபரொருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே இவ்வாறு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. விசேட அதிரடிப் படையினர், யாழ்ப்பாணம் பொலிஸார், மானிப்பாய், சுன்னாகம் பொலிஸார் விசேட பாதுகாப்புக் கடமைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளனர். இதனால் பொன்னாலை - வட்டுக்கோட்டை இடையிலான வீதியில் பயணிப்போர் பெரும் அசௌ »11

## தலையற்ற சடலம்; மரணத்தில் மர்மம்

யாழ்ப்பாணம், நவ. 21
பொன்னாலைச் சந்திக்கு அண்மையாகவுள்ள பற்றைக்குள்ளிலிருந்து தலையில்லாத நிலையில் சடலமாக மீட்கப்பட்டவர் அடையாளம் காணப்பட்டுள்ளபோதும் அவரது உயிரிழப்புத் தொடர்பில் மர்மம் நிலவுகின்றது.
ஆறுகால்மடத்தைச் சேர்ந்த கந்தசாமி சேகரன் (வயது - 56) என்பவரே கடந்த 18ஆம் »11

## மாவீரர் நாளுக்கு தடைவிதிக்க மறுப்பு

யாழ்ப்பாணம், நவ. 21
தெல்லிப்பழை மற்றும் அச்சுவேலி பொலிஸாரால் மாவீரர் நாளுக்குத் தடை கோரிய விண்ணப்பம் மல்லாகம் நீதிமன்றால் நிராகரிக்கப் »11

மாவீரர் நாளில்

## கார்த்திகைப் பூவை பயன்படுத்தக் கூடாதாம்!

கட்டளையிட்டது பொலிஸ்

கிளிநொச்சி, நவ. 21
மாவீரர் நாள் நிகழ்வுகளில் விடுதலைப்புலிகளின் சின்னங்கள், அடையாளங்கள் குறிப்பாக கார்த்திகைப் பூ எவற்றையும் பயன்படுத்தக் »11

## 2024 செப்ரெம்பரில் ஜனாதிபதித் தேர்தல்

கொழும்பு, நவ. 21
அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம் என்று தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் சமன் சிறி ரத்னாயக்க தெரிவித்தார்.
'ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபை என மூன்று தேர்தல்களை நடத்துவதற்காக 31 பில்லி »11

## பல்கலை. மே18 தூபி மீண்டும் விசாரணை

யாழ்ப்பாணம், நவ. 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள மே 18 தூபி தொடர்பில் மீண்டும் விசாரணைக்கு முன்னிலையாகுமாறு »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் தொடர்பாக வருடாந்தம் 5,000 குற்றங்கள்

## கைபேசிப் பாவனையே பிரதான காரணம்

**கொழும்பு, நவ.21**

**இலங்கையில் வருடாந்தம் சிறுவர்கள் தொடர்பான சுமார் 5 ஆயிரம் குற்றச்செயல்கள் பதிவாகின்றன என்று மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

போதைப்பொருள் பாவனை மற்றும் கைபேசிப் பாவனையே இவ்வாறான பல குற்றச் சம்பவங்களுக்கு வழிவகுத்துள்ளன.

நாட்டில் பெரும் பிரச்சினையாக மாறியுள்ள போதைப்பொருள் பிரச்சினையே சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு மிகப்பெரிய காரணியாகும். இலங்கையில் அதிக மக்கள் தொகை கொண்ட மாகாணம், மேல் மாகாணம், கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டத்தை கருத்தில் கொண்டால், சிறுவர்கள் தொடர்பான குற்றங்கள் பற்றிய புரிதல் எமக்கு இருப்பதால் நிலைமை தெரியும்.

பெரும்பாலான வழக்குகளுக்கு போதைப் பொருள் மற்றும் மதுபானப் பயன்பாடு காரணியாக அமைந்துள்ளது. சிறுவர்களை துஷ்பிரயோகத்துக்கு இட்டுச் செல்லும் ஆபத்தான ஆயுதமாக கைபேசிகளின் பயன்பாடு மாறியுள்ளது.

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தை குறைப்பதற்கு முதலில் ஒவ்வொரு பெற்றோரும் வீட்டில் சிறுவர்களின் கையடக்கத் தொலைபேசிப் பாவனையை கட்டுப்படுத்த வேண்டும் - என்றார். (எ-இ)

## மார்கழிப் பெருவிழாவையொட்டி திருவாசகக் கட்டுரைப் போட்டிகள்

கொழும்பு, நவ. 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறையும், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையும் இணைந்து எதிர்வரும் டிசெம்பர் 25ஆம் திகதி நடைபெறவுள்ள மார்கழி பெருவிழாவை முன்னிட்டு திருவாசக கட்டுரைப் போட்டியை நடத்தவுள்ளன.

தரம் 9 - 13 வரையான மாணவர்களுக்கான கட்டுரை 'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' எனும் தலைப்பில் 700 சொற்களில் அமையவேண்டும்.

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவன மாணவர்களுக்கான கட்டுரை "மன்னுமாமலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்" எனும் தலைப்பில் 1000 சொற்களில் அமையவேண்டும்.

பாடசாலை மாணவர்கள் அதிபர் ஊடாக தமது சுய ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துவதுடன், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வித்துறை மாணவர்கள் தமது கல்வி நிறுவன அடையாள அட்டைப் பிரதியை இணைத்து அனுப்பவேண்டும். கட்டுரைகள் எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதிக்கு முன்னராக 'தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். போட்டி தொடர்பிலான மேலதிக விவரங்களை 0707701111 எனும் தொலைபேசி இலக்கமூடாக பெற்றுக்கொள்ளலாம் என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (ச-66)

## 2,237 மாணவர்களுக்கு தவறான அனுமதிகள்

கொழும்பு, நவ.21

ஜனவரி 2020 முதல் 2022 மே மாதம்வரை சுற்றறிக்கைகளுக்கு முரணாக 2 ஆயிரத்து 237 மாணவர்களுக்கு தேசியப் பாடசாலைகளின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள், அமைச்சர்கள், திணைக்களத்தலைவர்கள், ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம் போன்றவற்றால் வழங்கப்பட்ட பரிந்துரைக் கடிதங்களுக்கு அமைவாகவே இந்த அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர்களால் 861 கடிதங்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் 654 கடிதங்களும், திணைக்களத்தலைவர்களால் 190 கடிதங்களும், மதகுருமாரால் 72 கடிதங்களும், பிரதேசசபை உறுப்பினர்களால் 53 கடிதங்களும் வழங்கப்பட்டுள்ளன என்று கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது. அதேவேளை பிரதமர் செயலகத்தால் 160 கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. (எ-6)



## ஆறு தாண்டி மயானம் செல்லும் நிலை அந்தரிக்கும் சின்னச்சாளம்பன் மக்கள்!

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்குட்பட்ட ஒட்டுசுட்டான் சின்னச்சாளம்பன் கிராம மக்கள் உயிரிழந்தவர்களின் உடலங்களைக் கொண்டு செல்வதற்கு ஆற்றைக் கடந்து கொண்டுசெல்ல வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

பிரதேசசபை சின்னச்சாளம்பன் கிராமத்தில் மயானம் இருந்தும் அங்கு உயிரிழந்தவர்களை எரிப்பதற்கான எந்த வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.

சின்னச்சாளம்பன் இந்து மயானத்துக்குச் செல்லும் ஒரு கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதியில் பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அப்போது ஆட்சியில் இருந்த புதுக்குடியிருப்புப் பிரதேசசபையால் 5 இலட்சம் ரூபா செலவில் நடந்து செல்வதற்கு ஏற்ற வகையில் சிறிய பாலம் அமைக்கப்பட்டது.

மயானத்துக்குச் செல்லும் வீதியில் ஆறு ஒன்றைக் கடக்க வேண்டியுள்ளது.

இந்த ஆற்றைக் கடப்பதற்கு அமைக்கப்பட்ட பாலத்தால் இறுதி ஊர்வலம் செல்ல முடியாது.

தற்போது ஏற்பட்டுள்ள மழையால் ஆற்றில் இறங்கிக் கடந்து செல்லவேண்டிய அவல நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். சரியான பாலமும், எரிகொட்டகையும் அமைக்கப்படாத நிலையில் அந்தப் பகுதி மக்கள் பெரும் அவலத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்த மயானத்தைச் சீரமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (எ-19)

## கஞ்சா மீட்பு

காரைநகரில் சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறைக் கடற்படையினருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. காரைநகர், சாம்பலோடை சிவகாமி அம்மன் ஆலய வீதியோரம் உள்ள பற்றைக்காடு ஒன்றில் இருந்து 101 கிலோ 750 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது என்று கடற்படையினர் தெரிவித்தனர். மீட்கப்பட்ட கஞ்சா சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-20-125)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம். நவ.21

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கம் தலைமையுரையையும், சைவப் புலவர் பொன். சந்திரவேல் "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவும் வழங்குவார்கள். நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ரி)

* * * * *

யாழ்ப்பாணம், நவ. 21

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்- 33, யாழ்ப்பாணம் சாவற்கட்டு ஆனைக்கோட்டை அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் காளி அம்பாள் தேவஸ்தானப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சேக்கிழார் பெருமான் குருபூசையைத் தொடர்ந்து சொற்பொழிவை இளஞ்சைவப் புலவர் நித்திய பாபுதரன் "அஞ்செழுத்தை மனத்துட் கொண்டு குழலூதிய நாயனார்" எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

நிகழ்வில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ரி)

* * * * *

யாழ்ப்பாணம், நவ. 21

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்த பெரிய புராணச் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் திருக்கார்த்திகை தீபச் சொற்பொழிவு சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசன் "திருக்கார்த்திகை மகிமை" எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஹிந்தவின் குடியுரிமையை பறிப்பதற்கு முயற்சியாம்

## நாமல் எம்.பி. பதறுகின்றார்

கொழும்பு, நவ.21

போரை முடிவுக்குக் கொண்டு வந்ததில் இருந்தே மஹிந்த ராஜபக்சவின் குடியுரிமையை பறிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுவந்தன என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அரசகொள்கையின் அடிப்படையிலேயே வரி குறைப்புச் செய்யப்பட்டது. அதற்கு நாடாளுமன்றத்தில் எதிரணிகளும் வாக்களித்துள்ளன. ஆனால் நாம் பொறுப்புக்கூறவேண்டும் எனக் கூறப்படுகின்றது. எதிர்காலத்தில் வரி அதிகரிப்பு இடம்பெற்றால் அதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்புக்கூறவேண்டும். மஹிந்த ராஜபக்சவின் குடியுரிமையைப் பறிப்பதற்கான முயற்சி இன்று எடுக்கப்பட்டது அல்ல. போரை முடிவுக்குக் கொண்டுவந்த நாளில் இருந்து அதற்கான முயற்சி இடம்பெறுகின்றது.

'அரகலய' காலத்தில் மஹிந்த ராஜபக்ச உள்ளிட்டவர்களை வீட்டுக்குள் வைத்தே கொலை செய்துவிட்டு தீ வைத்து எரிப்பதற்கு முற்பட்டனர். அந்த முயற்சியும் கைகூடவில்லை. அதனால்தான் வரி குறைப்புச் செய்ததை அடிப்படையாகக் கொண்டு தற்போது இந்த முயற்சி இடம்பெறுகின்றது. நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புத் தொடர்பில் சட்ட ஆலோசனை பெற்றுவருகின்றோம் - என்றார். (எ-44)

# விளையாட்டு அமைச்சை துறக்கும் எண்ணமில்லை

## ரொஷான் ரணசிங்க தெரிவிப்பு

கொழும்பு, நவ.21

பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காகவே அமைச்சுப் பதவியை ஏற்றேன். அதனால் பதவி துறக்கும் எண்ணம் இல்லை என்று விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அமைச்சுப் பதவியைத் துறந்து எதிரணியில் அமர்வீர்களா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

69 இலட்சம் பேர் கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களித்தனர். அதில் எனக்கும் பங்கு உள்ளது. ஊழல், மோசடி அற்ற ஆட்சி மற்றும் தேசியப் பாதுகாப்புக்காகவே மக்கள் ஆதரவை வழங்கினர். இதன்படி தேசிய இளைஞர் சேவை மன்றம், விளையாட்டு மற்றும் விளையாட்டுச் சங்கங்களில் மோசடி இருப்பதாகவும், அவற்றைச் சீர்செய்யுமாறும்கூறியே அமைச்சுப் பதவியை கோத்தாபய ராஜபக்ச எனக்கு வழங்கினார். அவர் பதவி விலகிய பின்பும் விடயதானங்களை ரணில் விக்கிரமசிங்க அப்படியே எனக்கு வழங்கினார்.

நான் பதவி விலகினால் பிரச்சினை தீருமா? இல்லை. பிரச்சினையைச் சரிசெய்யவே வந்துள்ளேன். அதனைச் செய்வதற்கு முற்படுவேன். சரியான விடயத்தைச் செய்யும் நபரை ஆளுங்கட்சியினர் எதிர்க்க மாட்டார்கள் என நம்புகின்றேன் - என்றார்.

அதேவேளை, சிறிலங்கா கிரிக்கெட்சபையின் கோரிக்கையின் பிரகாரமே சர்வதேச கிரிக்கெட்சபை, இலங்கைக் கிரிக்கெட் அணி தொடர்பில் தடை விதித்துள்ளது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (எ-44)

# நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் பங்குபெற அனுமதி தேவை

கொழும்பு, நவ.21

நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் வெளியாள்கள் பங்கேற்கவேண்டுமாயின், சபாநாயகரிடம் எழுத்துமூலமான முன் அனுமதியைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வு நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

எழுத்துமூலமான முன் அனுமதி இன்றி எந்தவொரு நபரும் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் பங்கேற்கமுடியாது என சபாநாயகர் அறிவித்தார். (எ-இ)

# 'வற்வரி' அதிகரிப்பால் மின்கட்டணம் உயராது

கொழும்பு, நவ.21

எரிபொருள் மீதான 'வற்வரி' அதிகரிப்பு காரணமாக மின்கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது என இலங்கை மின்சார சபைத் தலைவர் நளிந்த இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

2024 முதல் அரசாங்கம் எரிபொருளுக்கும் 3 வீதம் அதிகரித்த 'வற்வரி' அறவிடப்படும் என்று அறிவித்துள்ளது. எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்துக்கான மின்கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது.

எரிபொருள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மாற்று வழிகள் ஊடாக நீர் மின்சாரம், புதுப்பிக்கத்தக்க மீள்உற்பத்தி என்பவற்றின் வாயிலாகப் பெற்றுக்கொள்வது தொடர்பாக மின்சாரசபை அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-6)

# 516 பில்லியன் ரூபாவை அச்சிட்டது மத்திய வங்கி!

கொழும்பு, நவ.21

கடந்த செப்ரெம்பர் மாதம் 107.8 பில்லியன் ரூபா பணத்தை அச்சிட்டு வெளியிட்டுள்ளது இலங்கை மத்திய வங்கி.

இந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 516.1 பில்லியன் ரூபா பெறுமதியான நாணயத் தாள்கள் மத்திய வங்கியால் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. (எ-6)

# புதினம் தெரியுமோ?

காவலுக்குப் போட்ட வேலியே இப்ப காவாலியள் மாதிரி பயிரை மேயிறது கூடிப்போட்டுது. முந்தநாளும் இப்பிடி ஒரு சம்பவத்தால அநியாயமா ஒரு உயிர் பறிபோயிருக்கு. வட்டுக்கோட்டைப் பொலிஸ் பற்றி கனகாலமாவே சனத்திட்ட நல்ல அபிப்பிராயம் இல்லை. மற்ற இடங்களில் இருக்கிற பொலிஸ் ஸ்ரேசன்களில குற்றவாளியளைப் பிடிக்கிறதைப் பற்றியும், சட்டத்தை நடைமுறைப்படுத்திறதைப் பற்றியும், சனம் நிம்மதியா இருக்கிறதுக்கான வழிவகையளைச் செய்யிறதைப் பற்றியும் யோசிச்சுக் கொண்டிருக்க, இந்தப் பொலிஸ் ஸ்ரேசனில மட்டும் கசிப்புக் காய்ச்சுற ஆக்களிட்ட எவ்வளவு காசு வாங்கலாம், ஆருக்கு பொய்க்கேஸ் போடலாம், எந்த நினைவேந்தலைக் குழப்பலாம் எண்டு மட்டும்தான் நினைக்கினம். அந்தப் பொலிஸ் ஸ்ரேசன்ர ராசியோ என்னவோ அங்க வேலைக்கு வாற எல்லாப் பொலிஸ்காரரிட்டையும் இந்தக்குணம் உடன வந்திடுதாம்.

ஏதும் பொலிஸ் ரிப்போர்ட்டுகள் எடுக்கப் போனாக் கூட பொலிஸ்சு தரம் இழுத்தடிப்பினம். சனமும் களைச்சுப் போய் இருக்கேக்க, 'பெரிய ஐயா நான் சொன்னாக் கேப்பார், ஆனால் அதுக்குக் கொஞ்சம் செலவாகும்' எண்டு அந்தப் பாவப்பட்ட சனத்திட்ட காசை வாங்கிக் கொண்டுதான் அந்த அலுவலைச் செய்து முடிப்பினம். இதை அந்த ஸ்ரேசனில உள்ள எல்லாருமே முழுநேரத் தொழிலா வைச்சிருக்கினம். வட்டுக்கோட்டை பொலிஸ் ஏரியாவுக்குள்ள தான் கசிப்புக்கோட்டையள் கனக்க இருக்கு. பொலிஸ்காரர் நினைச்சால் அவையை விரல் சுண்டுற நேரத்தில பிடிச்சு, உள்ளுக்க போடலாம். ஆனால் அப்பிடிப் பிடிச்சால் பிறகு வருமானம் இல்லாமல் போடுமே.

முந்தநாள் பொலிஸின்ர காவலில இருந்த பெடியனை முதல்ல ஏதோ மரக்கடத்தல் கேஸ் எண்டுதான் பிடிச்சவையாம். பிறகுதான் அதை களவுக் கேஸா மாத்த வெளிக்கிட்டிருக்கினம். 'அந்தப் பெடியன் அப்பாவி. ஒரு சாப்பாட்டுக் கடையில வேலைசெய்யிறான். அவன் உப்பிடி களவெடுத்திருக்கமாட்டான். பொலிஸ்காரர் கேஸை முடிக்கோணும் எண்டதுக்காக அவனைப் பிடிச்சுக் கொண்டு போய் சித்திரவதை செய்து சாக்காட்டிப் போட்டாங்கள்' எண்டு அங்கத்தைச் சனமெல்லாம் சொல்லுதுகள். அந்தப் பெடியனை செய்யாத சித்திரவதையெல்லாம் செய்திருக்கினம். பின்னுக்கு கையைக் கட்டி அடிச்சிருக்கிறாங்கள், பொலித்தீன் பையுக்க பெற்றோல் ஊத்தி முகத்தைச் சுத்தி மணித்தியாலக் கணக்கில கட்டி வைச்சிருந்திருக்கினம், அதைவிட முகத்தை துணியால கட்டிப்போட்டு தண்ணியை ஊத்தி ஊத்தி அடிச்சு முறிச்சிருக்கிறாங்கள். இவ்வளவும் செய்துபோட்டு, 'ஆருக்கும் சொல்லக்கூடாது. மனித உரிமை ஆணைக்குழுவிட்ட முறையிடக்கூடாது' எண்டெல்லாம் பொலிஸ் வெருட்டியும் இருக்குது. சாராயமும் பருக்கி இருக்கிறாங்கள். அதுக்குப் பிறகு பெடியனுக்குத் தொண்டையால சாப்பாடு இறங்கேலை. கையில கயித்தால கட்டினதால பெரிய அடையாளம். இதால நாலுநாள் பெரியாஸ்பத்திரியில வார்ட்டில இருந்துட்டு, கொஞ்சம் சுகமெண்டு ஜெயிலுக்குக் கொண்டு போட்டினம். அதுக்குப் பிறகு முந்தநாள் மத்தியானம் நினைவில்லாத நிலை யில அந்தப் பெடியனைக் கொண்டந்து ஆஸ்பத்தி ரியில சேர்த்த 20 நிமிசத்தில் ஆள் செத்துப் போட்டுது.

இப்பிடியெல்லாம், ஆமிக்காரரை விடவும் மோசமா அடிச்சு சித்திரவதை செய்து, ஒரு உயிர் போறதுக்குக் காரணமா இருந்தவைக்கு வெறும் இடமாற்றத்தோட விசயத்தை முடிச்சுப் போடுவினம். ஆனால் போன உயிரை அவை திரும்பக் குடுப்பினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்னை முக்கோண வலயம் வடக்கு மக்களுக்கு பசியாற்றும்



யாழ்ப்பாணம், நவ. 21

**வடக்கின் தென்னை முக்கோண வலயம் வடக்கு மாகாணத்தில் நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி எழுந்து நிற்பதற்கு வழிவகுக்கும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

நாட்டின் இரண்டாவது தென்னை முக்கோண வலயமான கிளிநொச்சி, இயக்கச்சிப் பகுதியில் தென்னம் பிள்ளைகளை நடும் செயற்றிட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டின் இரண்டாவது தென்னை முக்கோண வலயம் கடந்த செப்ரெம்பர் மாதம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய 3 மாவட்டங்களுடன், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கி வடக்கு தென்னை முக்கோண வலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இந்தச் செயற்றிட்டம் சுமார் 40 ஏக்கர் நிலப்பரப்பில் 3 மாதங்களுக்குள் நான்கு இலட்சத்து 50 ஆயிரம் தென்னம் பிள்ளைகளை நடுகை செய்யும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடக்கில் மீள்குடியேற்றத்தின் பின்னர் வழங்கப்பட்ட தென்னம் பிள்ளைகள் இன்று மக்களின் வாழ்வாதாரமாக மாறியுள்ளன. இந்தத் திட்டத்தினூடாக இலவசமாக வழங்கப்படும் தென்னங்கன்றுகள் வட மாகாணத்தில் நலிவுற்றிருக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்.

அதேவேளை, நட்புசார் விவசாயத்தை விஸ்தரிக்கும் நோக்கில் எதிர்வரும் ஜனவரி மாதம் புதிய கையடக்கத் தொலைபேசி செயலி ஒன்றையும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-100)

தென்மராட்சிப் பிரதேச கிராம சக்தி இயக்கத்தால் மரநடுகை நிகழ்வு மட்டுவில் பொருளாதார மத்திய நிலையத்திலும் ஊரிப்பிட்டி இந்துமயானத்திலும் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வை தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் ஆரம்பித்துவைத்தார். (ரி-9)





மரநடுகை மாதத்தை முன்னிட்டு வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தால் குறிகாட்டுவானிலுள்ள சங்கத்துக்குச் சொந்தமான காணியில் அண்மையில் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன. (ச-17)

## வடக்கின் கல்விப் பின்னடைவை சரிசெய்வதற்கு ஒத்துழைப்போம்

### வடக்கு அதிபர்கள் சங்கம் தெரிவிப்பு

வடக்கு மாகாணக் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பின்னடைவை சரிசெய்வதற்கு ஒத்துழைப்பை வழங்கத் தயார் என்று வடக்கு மாகாண அதிபர்கள் சங்கம், வடக்கு ஆளுநரிடம் உறுதியளித்துள்ளது.

வடக்கு மாகாண அதிபர்கள் சங்கத்தின் தலைவர் த.ஜெயந்தன் தலைமையிலான குழுவினர் வடக்கு ஆளுநரை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் செயலகத்தில் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது வடக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ள பாடசாலை இடைவிலகல், பிரத்தியேக வகுப்புகளுக்கு அதிகநேரத்தை செலவிடுதல், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பு குறைதல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆளுநர் சுட்டிக்காட்டினார். மாணவர்கள் மீது அதிக அழுத்தங்களைப் பிரயோகிப்பதால் மனநிலைரீதியாக மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அந்த வகையில் பாடசாலை கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதோடு, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார். (ச-125-100)

## நாவற்குழி பால நீர் வெளியேற்றப்படாது

### நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

நாவற்குழி கடலேரியின் நீர்மட்டம் குறைவாகக் காணப்படுவதால் நாவற்குழி பாலத்திலுள்ள நீரை தற்போது வெளியேற்றமுடியாது என்று நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்துக்குப் போதிய அளவு மழைவீழ்ச்சி கிடைத்துள்ள போதிலும் வாய்க்கால் கதவுகள் இன்னமும்ள திறக்கப்படவில்லை. இதனால் குடியிருப்புகள் மற்றும் நெல் வயல்களில் வெள்ளம் அதிகமாகக் காணப்படுகிறது. எனவே வாய்க்கால் கதவுகளைத் திறந்து விடுங்கள் என விவசாயிகள் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தனர். ஆயினும் நாவற்குழி கடலேரியின் நீர்மட்டம் குறைவாகக் காணப்படுகிறது. வயல்களில் நெல் வளர்ச்சிக்கு நீரின் தேவை அவசியம் எனக் கருதுவதால் நீரை தற்போது வெளியேற்றமுடியாது என்று நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் குறிப்பிட்டனர். (ச-9)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**இடபம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். சிலர் உங்களை நம்பி முக்கியமான பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீரும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** கணவன்–மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். அவசரத்துக்கு கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**கடகம்:** சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீரும்.

**சிம்மம்:** உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சகோதரவகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை வெற்றியடையும். வாகனத்தை சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தினருடன் சுபவிஷயங்களில் கலந்து கொள்வீர்கள். அரசு காரியங்கள் நல்லவிதத்தில் முடியும். வழக்கில் திடீர் திருப்பம் வரும். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்வீர்கள்.

**துலாம்:** புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயற்படுவார்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை, கால் வலி சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**தனுசு:** சவால்கள் விவாதங்களில் வெற்றிபெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**மகரம்:** குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**கும்பம்:** இராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதம் ஏற்படும். வீண்வாதங்களை குறைக்க வேண்டும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்:** மறைமுக விமர்சனங்களும் தாழ்வு மனப்பான்மையும் வந்து செல்லும். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# என்று தணியும் இந்த வெளிநாட்டு மோகம்?

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகப் பணம் கொடுத்து ஏமாறும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களாக அதிகரித்திருக்கின்றன என்று எச்சரித்திருக்கின்றார் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விஷாந்த. யாழ்ப்பாணத்தில் இந்த மாதத்தில் மட்டும் சுமார் 10 முறைப்பாடுகள் இவ்வாறாகப் பதிவாகியிருக்கின்றன. அண்ணளவாக ஆறுகோடி ரூபா வரையில் மோசடி செய்யப்பட்டிருக்கின்றது என்றும் அவர் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

வெளிநாட்டு மோகம் ஈழத்தமிழர்களுக்குப் புதிதல்ல. 1980களின் மத்திய பகுதியில் இருந்து இந்த மோகம் தமிழர்களிடத்தில் ஆழமாக ஊடுருவி – விரவியிருக்கின்றது. பல்லாயிரம் தமிழ் அகதிகளின் வருகையை அடுத்து, அவர்களைப் பராமரிக்கச் சிரமப்பட்ட கிழக்கு ஜேர்மனி ஈழத்தமிழ் அகதிகளுக்கான கொடுப்பனவுகள் இதர சலுகைகள் என்பவற்றை நிறுத்தும், கட்டுப்படுத்தும் அளவுக்கு அக்காலத்திலேயே இந்த மோகம் தமிழர்களை ஆட்கொண்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக இன்றுவரையில் ஈழத்தமிழர்களின் வாழ்வியல் மேற்குலகங்களுக்கு அகதிகளாகப் படையெடுப்பதற்கும் பழக்கப்பட்டே விட்டது. 2009ஆம் ஆண்டுகளின் பின்னர் இந்த மோகம் எம் சமூகத்தில் இன்னமும் தீவிரமாகியிருக்கின்றது. முதலில் போரின் வெம்மையில் இருந்து உயிரைக் காப்பாற்றுவதற்காகப் புலம்பெயர்ந்து சென்ற எம்மவர்கள், நாளடைவில் வருமானமீட்டலுக்காக வெளிநாடு செல்வதை தங்கள் கட்டாயக்கடமையாக, பிறவிப்பயனாக நினைக்கத் தொடங்கிவிட்டார்கள். இலங்கையில் இப்போதிருக்கும் தமிழர்களின் சனத்தொகையை விடவும், புலம்பெயர் தேசங்களில் இருப்போரின் எண்ணிக்கை அதிகமே. அந்தளவுக்கு வெளிநாட்டு மோகம் இங்கு தலைவிரித்தாடுகின்றது.

இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்திருக்கின்றது. நாளுக்கு நாள் வாழ்க்கைச்செலவுகள் அதிகரித்துச் செல்கின்றன. இலங்கை ரூபாவைக் கொண்டு பொருளாதாரத்தைக் கட்டமைத்துக் கொண்டுள்ள ஒரு குடும்பம் அதன் சொந்த மண்ணில், மண்ணுக்கே உரித்தான பண அலகில் வாழமுடியாத நிலையில் ரூபாவை விடவும் பலநூறு மடங்கு பெறுமதி அதிகரித்துள்ள பவுண்டுகளும், யூரோவும், டொலரும் கிட்டினாலேயே வாழ்க்கைச்செலவு சுமுகமாகச் செல்லும் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ள பின்னணியில் புலம்பெயர்வுகள் தவிர்க்கமுடியாதவையாகின்றன. ஆனால், முறையான – சட்டபூர்வமான – புலம்பெயர்தலுக்கு எத்தனையோ வழிகள் இருக்கையில், இடைத்தரகர்கள் என்ற பெயரில் வரும் ஏமாற்றுப் பேர்வழிகளிடம் பணத்தை இலட்சங்களில் கொட்டுவதென்பது எப்படித் தகும்?

இங்கே பணத்தைப் பறிகொடுத்தவர்களில் பலர், முகத்துக்கு முகம் பழக்கமில்லாதவர்களிடமே பறிகொடுத்திருக்கின்றனர். பேஸ்புக் உள்ளிட்ட செயலிகளில் அறிமுகமாகும் நபர்களிடம் 'வெளிநாடு' என்ற ஒற்றைச் சொல்லுக்காக இலட்சங்களைக் கொட்டிக் கொடுத்திருக்கின்றனர். இந்தப் பணப்பரிமாற்றத்துக்கான நம்பிக்கை எங்கிருந்து கிடைத்தது? தாம் ஏமாற்றப்படலாம் என்ற சாத்தியங்களை, யதார்த்தத்தை, உண்மையை உணர்வதற்கும், அவர்களின் அகக்கண்கள் திறக்கப்படுவதற்கும் எதிராக, 'வெளிநாட்டு மோகம்' அவர்களை குருடர்களாகவும், சிந்தனை வறட்சியுடையவர்களாவும் மாற்றியிருக்கின்றது.

மேற்கத்தேய தேசங்களிலும் இப்போது பணவீக்கம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது, வேலை வாய்ப்புகள் இல்லாமலாகிக் கொண்டிருக்கின்றன போர்ச்சூழல் நிலவும் பலஸ்தீனம், சிரியா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அகதிகள் படையெடுப்பு அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இத்தனையையும் தாண்டி அங்குபோய் டொலரையோ அல்லது யூரோவையோ ஈட்டி இலங்கைக்கு அனுப்புவது ஒன்றும் மரத்தில் காய்த்துத் தொங்கும் காசுத்தாள்களைப் பிடுங்கும் செயலல்ல. எல்லாவற்றையும்விட குளிர், வெயில் இதையெல்லாம் தாண்டிய ஓட்டமும், அதற்கான வாழ்க்கைச் செலவும் அங்கு மிகையதிகம். இங்கு நீங்கள் ஆடம்பர வாழ்வு வாழவேண்டுமாயின் அங்கு உங்களை மீட்கச்சென்ற உயிர் அங்கலாய்த்துத் திரியவேண்டும். இந்தக் குறைந்தபட்சப் புரிதல் இருந்தாலேயே வெளிநாட்டு மோகம் குறையும். அது குறைந்தால் இப்படி முகவர்களை நம்பி காசைத் தொலைக்கும் அவலமும் மறையும்.




## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023



"குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டுபண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்."

– வங்கரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)




# இலங்கையில் அதிகரிக்கும் பதின்மவயதுத் தாய்மார்!

கொழும்பு, நவ.21

**குடும்ப சுகாதாரப் பணியகத்தின் அறிக்கையின்படி 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் சுமார் 2 ஆயிரத்து 87 பதின்மவயதினர் தாயாகியுள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமாரவின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இடம்பெயர்ந்த தாய்மார்கள், குடும்ப அமைப்பு சரிவு, பாலியல் கல்வி இல்லாமை, பெற்றோரிடையே போதைப்பொருள் பழக்கம், பெற்றோர் இருவரும் வேலையில் இருப்பது மற்றும் குழந்தைகளிடையே கைபேசிகளின் பயன்பாடு அதிகரிப்பு போன்ற பல காரணிகள் பதின்மவயதுத் தாய்மாரின் எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகுத்துள்ளது.

இலங்கையில் 12 இலட்சத்து 4 ஆயிரத்து 482 குழந்தைகளை உள்ளடக்கிய 89 ஆயிரத்து 164 ஒற்றைப்பெற்றோர் குடும்பங்கள் உள்ளன. இதனால், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் சட்ட உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட பல வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது - என்றார். (எ-இ)

## புதியவகை பாம்பு கண்டுபிடிப்பு

கொழும்பு, நவ.21

இலங்கையில் 76 வருடங்களின் பின் புதிய வகை பாம்பு இனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உலர் வலயத்துக்குட்பட்ட கிரித்தல பிரதேசத்தில் இந்தப் புதிய வகை பாம்பு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஊர்வன தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்ட நிரத்த நெத்து விக்கிரமசிங்க, துலான் ஆர். விதானபத்திரன, மகேஷ் சி. டி சில்வா, கொழும்புப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கமானி எச். தென்னகோன், பேராசிரியர் சமீர ஆர். சமரகோன் மற்றும் ஊர்வன நிபுணர் மெண்டிஸ் விக்கிரமசிங்க ஆகியோர் நீண்டகால ஆராய்ச்சியின் பின்னர் இந்தப் பாம்பு இனத்தை கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 76 வருடங்களுக்கு முன்னர் எட்வர்ட் டேலர் என்பவரால் இலங்கையில் புதிய இனப் பாம்பு கண்டுபிடிக்கப்பட்டது. (எ-இ)

## 11 மாதங்களில் 196 பேர் கைது!

கொழும்பு, நவ.21

இலங்கைக் கடற்பரப்புக்குள் கடந்த 11 மாதங்களில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 196 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் தற்போது வரையில் 196 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் 29 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (எ-இ)

**நாளை** 22.11.2023 புதன்கிழமை கார்த்திகை 06

சுபநேரம் : 04.40 - 06.10
ராகுகாலம் : 12.10 - 01.40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஞ்சிய அரசியல்கைதிகளை விடுவிக்கக் கருணைகூருக

## சார்ள்ஸ் எம்.பி. வேண்டுகோள்

கொழும்பு, நவ. 21
சிறைச்சாலைகளில் வாடும் எஞ்சிய தமிழ் அரசியல் கைதிகளையும் கருணை அடிப்படையில் விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்- இவ்வாறு நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:
2015 ஆம் ஆண்டு நான் நாடாளுமன்றம் வரும்போது 217 தமிழ் அரசியல்கைதிகள் சிறையில் இருந்தனர்.
அவர்களில் பலர் நீதிமன்றம் ஊடாகவும் ஜனாதிபதி பொதுமன்னிப்பு அடிப்படையிலும் விடுவிக்கப் பட்டுள்ளனர். தற்போது 13 பேர் எஞ்சியுள்ளனர். 15 வருடங்களுக்கு மேலாக அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள னர். கருணை அடிப்படையில் அவர்களை விடுவிப்பதற்கு ஜனாதிபதி முன்வர வேண்டும் - என்றார். (ச-44)



## புதிய அதிபர்கள் கௌரவிப்பு

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் புதிய அதிபர் நியமனங்களைப் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் லோகேஸ்வரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் புதிய தரம்3 அதிபர் நியமனம் பெற்ற ஆறு அதிபர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ரி-75)

## மணிவிழா

கிளிநொச்சி மகா வித்தியாலய அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கத்துக்கு பாடசாலை கலையரங்கத்தில் மணிவிழா அண்மையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் 'ஜெயதனம்' மணிவிழா மலர் வெளியிடப்பட்டது. (ரி-75)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, நவ.21
கிளிநொச்சி திருநகர் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாப் பொதியுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய கடந்த வெள்ளிக்கிழமை இரவு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ஒரு கிலோ 305 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸாரிடம் பாரப்படுத்தப் பட்டதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-113)

## பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், நவ.21
வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ஒருமைப்பாடுகள் மற்றும் நல்லிணக்க அமைச்சு ஆகியவற்றின் அனுசரணையில் வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையும், கோப்பாய்ப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய கலாசாரப் பெருவிழா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 9.30மணிக்கு நடைபெற்றது.
நிகழ்வில் இந்த ஆண்டுக்கான செம்புல இளங்குரிசில் விருது இளங் கலைஞர்களுக்கும், மூத்த கலைஞர்களுக்கும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.
பிரதேச செயலாளரும், பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான திருமதி. சுபாஜினி மதியழகன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும், வடமாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி. லாகினி நிருபராஷ் சிறப்பு விருந்தினராகவும், யாழ். மாவட்டச் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி. சுகுணாளினி விஜயரத்தினம், கலாபூஷணம் விசுவாசம் ஜெகநாதன் ஆகியோர் விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (ரி-66)

## கடத்தல்காரர்களுக்கு அதிகபட்ச தண்டனை!

### சுங்கத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.21
தங்கம் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் உட்பட தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கடத்துபவர்களுக்கு அதிகபட்ச தண்டனைகளை விதிக்க இலங்கை சுங்கத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.
100 கிராமுக்கு மேல் தங்கம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் உட்படக் கணிசமான அளவு தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கடத்துபவர்களுக்கு அதிகபட்ச அபராதம் விதிக்கப்படும் என திணைக்களத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளில் தங்கம், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் பிற பெறுமதியான பொருள்களின் கடத்தல்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த ஜூன் மாதம் முதல் தடைசெய்யப்பட்ட பெறுமதிமிக்க பொருள்களைக் கொண்டு வரும் நபர்கள் கைதுசெய்யப்பட்டால், அந்தப் பொருள்களின் மதிப்பைவிட மூன்று மடங்கு அபராதம் அல்லது ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## மருந்து இறக்குமதியால் பெருந்தொகை விரயம்!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.21
மருந்துகளை இறக்குமதி செய்வதில் இடம் பெறும் முறைகேடு மற்றும் ஊழல் காரணமாக ஆண்டுதோறும் பெருந்தொகைப் பணம் வீண் விரயமாக்கப்படுகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
அண்மைக்காலமாக இவ்வாறான ஊழல் நடவடிக்கைகளால் வருடாந்தம் முப்பது முதல் நாற்பது பில்லியன் ரூபா வீண்விரயமாகியுள்ளது.
அடுத்த வருடம் மருந்து இறக்குமதிக்காக 180 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
உரிய முறைமைக்கு அமைவாக மருந்துகளை இறக்குமதி செய்வதன் மூலம் பணம் வீண்விரயமாவதைத் தடுக்கமுடியும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். (எ-இ)

# மன்னார் வேதசாட்சிகளை புனிதர்களாக மாற்றுங்கள்

## பாப்பரசரிடம் மன்னார் ஆயர் வேண்டுகோள்



மன்னாரில் வேதசாட்சிகளாக மரித்த கத்தோலிக்கர்களை புனிதர் வரிசையில் சேர்க்க வேண்டும் என பாப்பரசரிடம் மன்னார் ஆயர் மேதகு லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.
மன்னார் ஆயர் தலைமையில் திரட்டப்பட்ட வேதசாட்சிகளின் ஆதாரங்களை வத்திக்கானில் வைத்து கடந்த வாரம் திருத்தந்தையிடம் சமர்ப்பித்து மேற்படி கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.
மன்னார் பட்டித்தோட்டத்தில் வசித்து வந்த 600க்கும் மேற்பட்ட கத்தோலிக்கரை கத்தோலிக்க மதத்தை கைவிடவேண்டும் எனக் கோரப்பட்டு அவர்கள் அதற்கு இசையாமையால் கொலைசெய்யப்பட்டனர். இவர்கள் மரித்து 480 வருடங்களை எட்டியுள்ளது.
அந்தவகையில் இவர்களை புனிதர் வரிசையில் சேர்க்கவேண்டும் என்று சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இல்லம் தெரிவித்துள்ளது. (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவர்கள் ஒடுக்கப்படுவதை சட்டம் வேடிக்கை பார்க்கிறது!

மறவன்புலவு சச்சி ஆதங்கம்

யாழ்ப்பாணம், நவ. 21

சைவசமயத்தவர்களை அடக்கியொடுக்கும் கீழ்த்தர செயற்பாடுகளில் ஏனைய மதத்தவர்கள் ஈடுபடுகின்றனர். சட்டம், ஒழுங்கு அவற்றை வேடிக்கை பார்க்கின்றது - இவ்வாறு இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

ஆங்கிலேயர் விட்டகன்றபோது மூன்றில் ஒரு பங்கு நிலம் சைவர்களிடம் இருந்தது. சைவமக்கள் தொகை 30 வீதமாகக் காணப்பட்டது. தற்போது சைவமக்களின் மரவுவழி நிலப்பரப்பு 15 வீதமாகக் குறைந்துள்ளது. எஞ்சிய சைவர்களையும் அழித்து ஒழித்து அவர்களது நிலங்கள் கைப்பற்றப்படுகின்றன.

மயிலத்தமடுவில் சைவத்தமிழர் வாழ்வுரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அங்குள்ள புத்த பிக்கு ஒருவர் சைவர்களை வெட்டுவேன், கொல்வேன் எனக் கூறுகிறார். அவற்றை பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றனர். அக்கரைப்பற்றில் முகமதி மௌலவி ஒருவர் நடராஜப் பெருமானின் நடனத்தைக் கொச்சையாக்கிப் பேசி காணொலி வெளியிடுகின்றார். இலங்கையில் சைவ சமயத்தவரை அழிக்கவேண்டும்- ஒடுக்க வேண்டும் என்ற கண்ணோட்டத்திலா அரசு செயற்படுகிறது? இலங்கையில் சட்டம், ஒழுங்கு சைவசமயத்தவருக்கு எதிரானதா? சைவர்களே விழித்துக் கொள்ளுங்கள் - என்றுள்ளது.

(ச-66)



அதிகளவு மழைவீச்சி

# மேவிப் பாய்கிறது நந்திக்கடல் நீரேரி

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்துவரும் மழையால் நீர்வரத்து அதிகமாகி வட்டுவாகல் ஊடாக நந்திக்கடல் மேவிப்பாய ஆரம்பித்துள்ளது.

கரைதுறைப்பற்று உட்பட முறிப்புக்குளம் வான்பாய்கின்றநிலையில், முத்தையன் கட்டுக்குளத்தின் கீழான பேராற்று நீரும் நந்திக்கடலை சென்றடைந்து கொண்டிருப்பதால் நீர்மட்டம் உயர்வடைந்து முகத்துவாரம் உடைப்பெடுத்து முல்லைத்தீவுப் பெருங்கடலுடன் இணைந்துள்ளது.

கடந்த காலங்களில் நந்திக்கடல் நீர்மட்டம் உயர்வடைந்தால் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையமூடாக கமக்கார அமைப்பினருடன் கூட்டம் நடத்தப்பட்டு பூசை வழிபாடுகளுடன் முகத்துவாரம் வெட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-19)

# பேருந்து விபத்து; பயணிகள் அருந்தப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கிப் புறப்பட்ட தனியார் பேருந்து முழங்காவில் பகுதிக்கு அருகில் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. பயணிகள் எந்தக் காயங்களும் இன்றி தெய்வாதீனமாகத் தப்பியுள்ளனர்.

தனியார் பேருந்தொன்றை அதற்குப் பின்னால் வந்த பேருந்து முந்திச்செல்ல முற்பட்டபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளது என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளன.

(ம-213-125-60)

# குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், நவ.21

ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியத்தின் ஏற்பாட்டில் கல்விக்காக காவியமான ஹாட்லியின் மைந்தர்கள் நினைவாக வருடாந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வு ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் உட்பட 39 பேர் கலந்து கொண்டனர்.

(ரி-66)




## பெயர் மாற்றம்

கட்டைக்காடு முள்ளியான் இல் வதியும் அன்ரனி செல்வகுமார் மரியசாநதா ஆகிய நான் எனது பெயரை அன்ரனி செல்வகுமார் மரியசாந்தி என மாற்றம் செய்தோடு இனி வரும் சகல ஆவணங்களிலும் அன்ரனி செல்வகுமார் மரியசாந்தி என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

அன்ரனி செல்வகுமார் மரியசாந்தி


## மரண அறிவித்தல்

தோற்றம் 16 - 07 - 1959



மறைவு 19 - 11 - 2023

### இராஜகுலேந்திரன் பரமேஸ்வரி

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் அரசவீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜகுலேந்திரன் பரமேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு லக்ஸ்மி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர் பாக்கியம் தம்பதியரின் மருமகளும், இராஜகுலேந்திரனின் (பெரியண்ணா) அன்பு மனைவியும், இராஜாஜி, மதன்ராஜ், காலஞ்சென்ற நிசாந்தன் மற்றும் மதுரா, கிரிசாந் ஆகியோரின் பாசமிகு தாயாரும், விக்னேஸ்வரி, கனகேஸ்வரி, இராஜேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசலிங்கம் (லிங்கண்ண), இராசவரோதயம் பராசக்தி (தேவி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அரசவீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசவீதி,
நல்லூர்

தகவல்:
குடும்பத்தினர்.

CS 27046 (AK.1)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 28 . 03 . 1940



ஆண்டவன் அடியில் 19 . 11 . 2023

### சிவஞானசுந்தரம் கமலாட்சி

யாழ் மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், உசனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம் கமலாட்சி கடந்த (19.11.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் புதுநாச்சி ஆகியோரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை நாகமுத்து முத்துப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரத்தின் அன்புமனைவியும், இராஜேஸ்வரியின் (ஜேர்மனி) சகோதரியும், சிவகலா, சிவநேசன் (முன்னாள் சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர்), சிவராஜினி (இத்தாலி), சிவேந்திரன், சிவகெங்கா (ஆசிரியர், விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்), சிவநந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயசுதா, இராஜலிங்கம், ரேவதி, ரமேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிவசோதி, சிவரஞ்சன், சிவசேரன், சிவதீசன், சிவச்சந்திரன் மற்றும் சிவகாந்தன், சிவகாந்தினி (ஜேர்மனி), சிவசாந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் பெரியம்மாவும், அமரர் கனகநாயகம், சிவநாதன், தணிகாசலம் மற்றும் மதயாபரணம், வள்ளிமுத்து, இராசவேல், அமிர்தலிங்கம், யோகராசா, யோகமங்களம், யோகலட்சுமி, திருப்பதி, வளர்மதி ஆகியோரின் மைத்துனியும், கலைஎழிலன், துளசிகா, துலக்ஷன், ஷார்மிகா, சிந்துஜா, கபிலன், பவதரன், கிருஷாந், அகிஷா, விதுஷன், லக்ஷி, பிரதீஷ், பிரியந், பிரிஷா, பிரவீன், அர்வின், அஸ்விகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கர்வினின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2023) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (கச்சாய் வீதி, கொடிகாமம்-மகன் சிவநேசன் இல்லம்) நடைபெற்று, தகனக்கிரியைக்காக மிருசுவில் வடக்கு பெரியான் ஒடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.
சிவநேசன் 077 162 8461

(CR 41067) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் இன்று கருத்தாடல்

யாழ்ப்பாணம், நவ. 21

சமூக ஒன்றிணைப்பை ஏற்படுத்துவதில் காணப்படும் தடைகளைக் களைதலும் ஒற்றுமைக்கான வழிகளை மேம்படுத்தலும் என்னும் தலைப்பில் கருத்தாடல் நிகழ்வு மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ராஜா கிறீம் கவுஸ் மண்டபத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். மனித உரிமைகள் இணைப்பாளர் த.கனகராஜ் கலந்துகொள்ளவுள்ளதுடன், வளவாளர்களாக மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன், வடமாகாண தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைப்பாறிய பணிப்பாளர் விமலேஸ்வரி சிறீகாந்தரூபன், தேசிய தொழிலாளர் சமூகதலைவர்எஸ்.வீ.சுப்பிரமணியம், தேசிய தொழிலாளர் சமூக இணைப்பாளர் அன்ரன் ஜேசுதாஸ் மற்றும் அரசியல் ஆய்வாளர் எம்.நிலாந்தன் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர் என மகளிர் அபிவிருத்தி நிலையப்பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் அறிவித்துள்ளார். (ய)


## கடை விற்பனைக்கு

வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு முன் வீதியில் கடையொன்று விற்பனைக்குண்டு.

077 138 0670


## திருத்தி வாசிக்கவும்

19.11.2023 ஆம் திகதிய பத்திரிகையில் வெளிவந்த நல்லூர் பல நோக்கு கூட்டுறவுச் சங்க பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை தொடர்பான விளம்பரத்தில் (9 ஆம் பக்கத்தில்) இன்றையதினம் என தவறுதலாக பிரசுரமாகியுள்ளது அதனை அன்றையதினம் எனத் திருத்தி வசிக்கவும்

(cr.41065) (N.1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 02 . 1935

மறைவு 17 . 11 . 2023



**துரைசிங்கம் பாக்கியரத்தினம்**

புன்னாலைக்கட்டுவனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பாக்கியரத்தினம் அவர்கள் கடந்த (17.11.2023) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2023) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக காடைகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன்.

077 945 4688

074 067 7637

(CS 27016) A-1

## நினைவு கூறுகின்றோம்

அராலியூர் பெற்றெடுத்த அற்புத மைந்தன்
(முன்னாள் சமுர்த்தி வங்கி உத்தியோகஸ்தர்
பிரதேச செயலகம் சங்கானை)
திரு.திருமதி இராசநாயகம் தம்பதியர்
பெற்றமகன்

அமரர் உயர்திரு.

**இராசநாயகம் சிறீகரன்**

அவர்களை அவர்மறைந்த

8ஆம் ஆண்டில் நெஞ்சம் நெகிழ நினைவுகூர்வோம்



மண்ணிலே 11.12.1976

விண்ணிலே 20.11.2015

திதி: பூர்வபட்ச நவமி

நம்பி இருந்த எம்மை நட்டாற்றில் விட்டுவிட்டு
நம்பிநீ போன இடம் அறியாமல் தவிக்கின்றோம்
எம்மடியில் நீ வாழ்ந்த நாட்களை நாம் எண்ணி எண்ணி
இம்மிகூட உறக்கமின்றி ஏங்கி ஏங்கித் தவிக்கின்றோம்
செம்மையுறப் படித்தவனே சிறப்போடுபணி செய்தவனே
கும்பிட்ட தெய்வமெல்லாம் கைவிட்டதான் போனாயோ
இம்மையை விட்டு நீயும் மறுமைக்குள் புகுந்தின்று
தெம்பிலா எட்டாண்டும் வந்ததுனை நினைவுகூர்வோம்!

நெஞ்சம் நெகிழ உனை நினைவு கூரும்
குடும்பத்தவர்கள்
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

## சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் கருவாட்டுக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2024

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட சந்தைகள், கோழியிறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், என்பவற்றிற்கு 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்கு வதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2023.11.21 - 2023.11.29 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2023.11.29 பி..ப 2.00 மணிவரை
கேள்விதிறக்கும் திகதி :- 2023.11.29 பி.ப 2.30 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரியநேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது 2023.11.21 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் எமது கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பார்வையிடலாம்.

### சந்தைகள், கோழியிறைச்சி மற்றும் மாட்டிறைச்சி கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை - 2024

| இல | சந்தைகள் இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைகள் | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| | சங்கானை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 01 | 1,500.00 | 218,405.00 | 3,000.00 | 1,000.00 |
| 02 | சங்கானை கோழி இறைச்சிக்கடை இல- 02 | 1,500.00 | 198,900.00 | 3,000.00 | 1,000.00 |
| 03 | நவீன மீன்சந்தை வாகனத்தரிப்பிடம் | | 912,000.00 | 10,000.00 | 1000.00 |
| 04 | சங்கானை மாட்டிறைச்சிக்கடை | 1,500.00 | 1,903,600.00 | 20,000.00 | 1000.00 |
| | சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 01 | பல்லசுட்டி சந்தை | — | 29,300.00 | 3,000.00 | 1,000.00 |
| 02 | தொல்புரம் மத்திய சந்தை | — | 26,500.00 | 3,000.00 | 1,000.00 |
| 03 | பொன்னாலை வாராந்தச் சந்தை | — | 41,100.00 | 3,000.00 | 1,000.00 |
| | வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 01 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 01 | 1,750.00 | 162,900.00 | 3,000.00 | 1,000.00 |
| 02 | சங்கரத்தை கோழி இறைச்சிக்கடை - 02 | 1750.00 | 137,000.00 | 3,000.00 | 1,000.00 |

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை
சுழிபுரம்.

செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை - சுழிபுரம்

## கடை வாடகைக்கு வழங்குதல் - 2024

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கடையினை உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/46 ஆம் இலக்க 1980.12.11 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமையவும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைக்கு அமை வாகவும் வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக் குறைந்த ஒரே முறையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | கடை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | மீளளிக்க முடியாத கேள்விப்படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | சுழிபுரம் நவீன சந்தைக் கடை இல. - 05 | 405,000.00 | 8,100.00 | 1000.00 |

கடைகளை வாடகைக்கு வழங்குதல் தொடர்பான கேள்வி நடைமுறைக்கு மேற்குறித்த திகதிகள் பொருத்தமானது. மேலதிக நிபந்தனைகளை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

ச.பாலரூபன்,
தலைவர்,
உள்ளூர் அதிகார பெறுகைச் சபை,
வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.
2023.11.20

(cr.41066) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலனாய்வாளர்போல் நடித்து வியாபாரியிடம் பணம் 'அபேஸ்'

யாழ்ப்பாணம், நவ. 21

பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் போன்று நடித்து பால் வியாபாரியிடம் 15 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்த சம்பவம் நவாலியில் கடந்த வெள்ளிக்கிழமை பதிவாகியுள்ளது.

நவாலி சோமசுந்தரம் வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தம்மை பொலிஸ் புலனாய்வாளர்கள் என்று அறிமுகப்படுத்தியுள்ளனர். பின்னர் அவர்கள் உயிர்கொல்லி கஞ்சாவை பால்வியாபாரி உடைமையில் வைத்திருப்பதாகத் தெரிவித்து அவரது பேர்ஸை சோதனையிட்டு அதிலிருந்த 15 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். (அ-ஒ-125)

# இந்தியாவின் தோல்வி இளைஞன் உயிரிழப்பு

சென்னை, நவ. 21

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்ததை தாங்கமுடியாமல் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அஹமதாபாத்தின் நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதின. இந்திய அணி அவுஸ்திரேலிய அணியிடம் தோல்வியடைந்தது. ஒட்டுமொத்த இந்திய அணி ரசிகர்களையும் இது நிலைகுலையச் செய்தது. இதனால் உயிர் பறிபோன சம்பவம் இந்தியாவின் திருப்பதி மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளது.

திருப்பதி அருகே தூர்க்க சமுத்திரம் பகுதியைச் சேர்ந்த ஜோதிகுமார் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் தனது வீட்டில் இருந்து போட்டியைப் பார்த்துக் கொண்டிருந்துள்ளார். இதில் இந்தியா தோல்வியடைந்ததையடுத்து இவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து குடும்பத்தினர் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அவரை அழைத்துச் சென்றுள்ளனர். இளைஞர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அங்கு தெரிவிக்கப்பட்டது. (அ-ஒ-100)

# பதவி துறக்கத் தயார்!

கொழும்பு, நவ. 21

எனக்கு எதிராக பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டை முற்றாக நிராகரிக்கின்றேன். இது பற்றி விசாரணை நடத்துங்கள். குற்றச்சாட்டு நிரூபிக்கப்படின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதற்குத் தயார் - இவ்வாறு கோப் குழுவின் தலைவரும், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் பண்டார தெரிவித்தார். (அ-ஒ-44)

# கண்டல்தாவரங்கள் மன்னாரில் நடுகை

மன்னார், நவ. 21



'இயற்கையை நேசித்து சூழலைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் மன்னார் நகர பிரதேச செயலர் மனோகரன் பிரதீப் தலைமையில் மன்னார் பெரியபாலத்தைச் சூழவுள்ள கடற்கரையோரப் பகுதிகளில் கண்டல்தாவரங்கள் அண்மையில் நடப்பட்டன.

மன்னார் பிரதேச செயலக உத்தியோகத்தர் களும் கடற்படையினரும் இணைந்து கண்டல் தாவரங்களை நட்டனர். (ச-213)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 . 09 . 1963



மறைவு 21 . 11 . 2016

அமரர்


### இராசரத்தினம் ரவிச்சந்திரன்

அனைவருக்கும் கிடைத்த பரிசு
எமக்கும் கிடைத்தது - ஆனால்
அனைவருக்கும் கிடைக்காத சாபம்
எமக்கும் கிடைத்தது - அது
எம் அப்பாவை எம்மிடமிருந்து பிரித்தது
ஆண்டுகள் ஏழு சென்றாலும் - மறவோம்
எம் அப்பாவை என்றென்றும்.

பிரிவால் துயருற்றிருக்கும்
மனைவி சாந்தி,
பிள்ளைகள் கீர்த்தன், தூரிகா (ஜேர்மனி)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 03 . 1932



மறைவு 20 . 11 . 2023

### கலாபூஷணம் இராசையா பீதாம்பரம் (பற்குணம்)

**(ஸ்தாபகர் - வண்ணை கலைவாணர் நாடக மன்றம்)**

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பீதாம்பரம் (பற்குணம்) அவர்கள் நேற்று (20.11.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற நடராஜாவின் அன்புச் சகோதரனும், கருணாநிதி (சாயி போட்டோ), [illegible] அன்பு (நில அளவைத் திணைக்களம் - யாழ்ப்பாணம்.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி, கனீந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், இந்திர[illegible] கௌசி, சிவசக்தி, தர்சினி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், சாஜிசங்கர், [illegible] ஜனந்தன், அஜந்தன், கஜந்தன், சாயிகீர்த்தனா, ஜனார்த்தனன், வசீகரன், [illegible]க்ஷா, மானஸ்வி, யதுஷி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.[illegible]2023) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"சாயி போட்டோ"**
**1010/11, கே.கே.எஸ் வீதி,**
**நாச்சிமார் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 2263 864**
**077 6153 785**

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 04 . 1947



மறைவு 16 . 11 . 2023

### திருமதி இந்திராணி சந்திரசேகரன் (கனடா)

சாந்தாவீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொழும்பு, கனடா Mississauga ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்ட இந்திராணி சந்திரசேகரன் அவர்கள் கடந்த (16.11.2023) வியாழக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சுந்தரம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்துரை சந்திரசேகரன் அவர்களின் அன்பு மனைவியும், லோகதரன் (கனடா) அவர்களின் பாசமிகு தாயாரும், வாஞ்சிதா (கனடா) அவர்களின் பாசமிகு மாமியும், ராதகிருஷ்ணன் (கனடா), கிருஷ்ணகுமாரி (பிரான்ஸ்), ஶ்ரீரஞ்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சரசராசா (கனடா), காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, கதிரிதம்பி, இராசமணி, கருணாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கஜந்தன்-பவானி (கனடா) தம்பதிகளின் பாசமிகு சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2023) செவ்வாய்க்கிழமை கனடாவில் St.Jhon's Dixie Cemetry & Crematorium (10.00AM-12.00PM) இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**லோகதரன் - மகன்**
**+16472345642**

(CS 27050) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

2023ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகியிருந்தன. அவற்றில் பாடசாலைகள் ரீதியாக அனுப்பப்பட்ட பெறுபேறுகளின் விவரம்:-

**யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை**

ய.யனுசன் - 186, சு.பங்கஜன் - 183, பா.அம்ஷிக் - 181, ச.பிருந்திகன் - 180, கெ. கோஜனன் - 179, ம.சிருஷ்டிகன் - 176, ம.அக்சயன் - 176, நி.அஸ்னிகா - 173, அ.அக்ஷயன் - 170, க.யதுசன் - 169, வி.ஆய்ஷன் - 167, ர.ஷகீன் - 167, ஜெ.கிரிதா - 167, பி. கேனுஷாந் - 166, வி.டஷிகா - 165, ச.ஆர்த்தனா - 163, ம.நேருஜன் - 163, க.அஷ்விகன் - 161, பி.தருஷப்ரமோத் - 161, ப.கிருஷ்னி - 160, அ.யபிஷனன் - 159, சி.சௌமிகா - 158, தி.அபிராமி - 157, ஜீ.ஆருரன் - 157, க.மகினன் - 156, ஜெ.சௌமியா - 156, செ.அபிஷாந் - 154, த.அபிவர்சனா - 153, ந.மிதுசாளினி - 152, வ.சாம்பவி - 152, பி.அஷ்வினா - 152, ஜெ.அஸ்வின் - 150, அ.திஸ்யா - 150, உ.லிதுர்ஷனா - 150, கா.சியானி - 149, செ.அபிஷேக் - 147, மு.திரிலோஜன் - 147, க.அந்தோனியன் - 146, தி.மிதுனா - 145, க.அஸ்மிகா - 145.

**யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

த.கபினாஷ் - 185, க.டிநேசன் - 185, வி.சிவமிதன் - 183, ரா.அபிராமி - 181, இ.பிரஷாஜினி - 181, ச.புவிராஜ் - 178, ய.லசாந் - 175, க.எட்னா - 174, ம.தர்மிதா - 171, ப.ஆரணா - 164, சு.லயானா - 165, அ.விக்னேஷ் - 163, ஜெ.அஞ்சனா - 163, அ.கேபின்சன் - 162, உ.நிஷாரிகா - 161, சு.சன்சிகா - 158, யோ.சங்கீத் - 158, அ.ஆசிஷ் - 156, ச.அபிஸ்னா - 156, நி.தமிழினி - 156, சி.பூர்விஹன் - 155, ய.அனுநாத் - 155, க.பவிஷா - 154, மு.ஜெர்லினா - 153, கோ.கர்ணிகா - 153, ரா.பிரணவி - 152, கி.அருஷ் - 152, றொ.பிறின்சிகா - 150, ர.அக்ஷிதா - 149, நி.ஓவியா - 149, சி.சந்தோஷிக்கா - 146, ஞா.மகிஷா - 145. (ரி-159)

## சபாநாயகருக்கு வழங்கப்பட்ட 'சுபிரி தன சம்பத'



அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஜித் குணரத்ன நாரகல புதிய லொத்தர் சீட்டு "சுபிரி தன சம்பத"வை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வு கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அபிவிருத்தி லொத்தர் சபையின் பொது முகாமையாளர் அனுர ஜயரத்ன, பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) விஜிதா சோமரத்ன மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) சானக தொடங்கொடகே ஆகியோர் கலந்துகொண்டனர். (ஏ)

## திரையிசைப் பாடல் இசையில் சென்.பற்றிக்ஸ் இரண்டாமிடம்!

*யாழ்ப்பாணம், நவ. 21*

இலங்கை கல்வி அமைச்சு நடத்திய அகில இலங்கை தேசிய மட்ட கர்நாடக சங்கீதப் போட்டி அநுராதபுரம் சுவர்ணபாலி மகளிர் கல்லூரியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் திரையிசைப் பாடல் இசையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். (ரி)





## புத்தாக்க நடனப் போட்டியில் வவு. தமிழ் ம.வி. முதலிடம்

வவுனியா, நவ. 21

அகில இலங்கை பரதநாட்டிய புத்தாக்க நடனப் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். (ரி-75)

## நாட்டுப்பாடல் இசையில் சென்.பற்றிக்ஸ் முதலிடம்



*யாழ்ப்பாணம், நவ. 21*

இலங்கை கல்வி அமைச்சு நடத்திய **2023** அகில இலங்கை தேசிய மட்ட கர்நாடக சங்கீதப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுச்சாதனை படைத்துள்ளனர். (ரி)

## வடக்கில் முதலிடம்



கிளிநொச்சி, நவ.21


தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியால மாணவியான கிருஸ்ண லிங்கம் தாருஜா என்ற மாணவி 196 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மாணவிகள் இருவருக்கே அதி கூடிய புள்ளிகள் கிடைத்துள்ளன. (எ-214)

## தேசிய மட்டத்தில் முதலிடம்!

வவுனியா, நவ.21

வவுனியா மாவட்டத்தில் வடக்கு வலயத்துக்குட்பட்ட புதுக்குளம் மகா வித்தியாலய மாணவன் சி. ரிதுர்சன் இலங்கை கர்நாடக தனி இசைப் போட்டியில்தேசியநிலையில்முதலிடத்தைப்பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (ரி-75)






## திருநர் வலையமைப்பின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், நவ.21

யாழ். திருநர் வலையமைப்பின் ஏற்பாட்டில் திருநர் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாண நகரில் விழிப்புணர்வு நடைபயணமொன்று நடத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்நடைபயணம் ஆரம்பமானது.

திருநர்களுக்கு எதிரான ஒடுக்குமுறையால் உயிரிழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (எ-26)

## பெரியமடு தமிழ் பாடசாலை புலமைப்பரிசிலில் சாதனை



வவுனியா, நவ. 21

வவுனியா வடக்கில் பெரியமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 59 வருடங்களின் பின்னர் புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்துள்ளது.

குறித்த பாடசாலை மாணவன் க. டில்சாந் வெளியாகிய தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளை பெற்று வரலாற்றுச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

அத்துடன் பாடசாலையிலிருந்து பரீட்சை எழுதிய அனைத்து மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குத்தொடுவாய்
# புதைகுழி அகழ்வு நேற்று ஆரம்பம்

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி க.வாசுதேவா, தடயவியல் பொலிஸார், கிராமஅலுவலர் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

அகழ்வுப் பணிகள் நிறுத்தப்படும்போது பாதுகாப்புக்காக மூடப்பட்டிருந்த பொலித்தீன் உறைகள், உடல் எச்சங்களுக்கு மேற்பகுதியில் காணப்பட்ட மண் என்பவற்றை அகற்றும் பணி நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்கு பொறுப்பான மேலதிக செயலர் எல். இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், காணாமற்போனோருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் ஜே.தற்பரன், சட்டத்தரணிகளான வி.கே.நிறஞ்சன், கு.ஆன்சுமங்கலா ஆகியோர் அகழ்வுப் பணிகளை நேற்றுப் பார்வையிட்டனர். (அ-ஒ-113)

# மயங்கிய முதியவர் சாவு!

நவாலியில் துவிச்சக்கர வண்டியில் சென்ற முதியவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த அருளப்பு விமலதாஸ் (வயது - 70) என்ற முதியவரே உயிரிழந்தவராவார். (அ-ஒ-125)

## சித்தன்கேணி...

மல்லாகம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் கட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரான சித்தங்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது -25) என்பவர் உயிரிழந்திருந்தார்.

உயிரிழந்தவர் உள்ளிட்ட இருவர் கடந்த 8ஆம் திகதி திருட்டுச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் இருவரும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில்தடுத்து வைக்கப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தமையாலும் அவர்கள் வீடு திரும்பாமையாலும் அச்சமடைந்த உறவினர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர். இதனையடுத்து அவர்கள் கடந்த 10ஆம் திகதி மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். பொலிஸாரின் ஆட்சேபனையையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் கட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

இருவரும் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிறைக்காவலர் மூலம் சந்தேகநபர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை முடிந்து சிறைச்சாலையில் மீண்டும் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அவருக்கு உடல் பாதிப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மீண்டும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட சில நிமிடங்களில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரின் உடற்கூற்றுப் பரிசோதனை சட்டமருத்துவ நிபுணர் உ.மயூரதனால் நேற்று முன்னெடுக்கப்பட்டது. அதில், சந்தேகநபர் கடுமையாக அடித்து துன்புறுத்தப்பட்டதால் சிறுநீரகம் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்தார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. நேற்றிரவு இளைஞரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, பொலிஸ் பாதுகாப்புடன் அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (அ-ஒ-26-27-125)

## 2024 செப்ரெம்பரில்...

யன் ரூபா கோரி வரவு - செலவுத் திட்டத்துக்கு யோசனை முன்வைக்கப்பட்டது. ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு இரு மாதம் அல்லது ஒரு மாதத்துக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும். அந்தவகையில் 2024இல் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களுக்கிடையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டரை வருடங்கள் கடந்துள்ளதால் நாடாளுமன்றத்தை எந்நேரத்தில் வேண்டுமானாலும் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. எனவே, அடுத்த வருடம் பொதுத்தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியமும் உள்ளது' - என்றார். (அ-ஒ-44)

## நீதி...

தொடரவேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்படும் இளைஞன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொலிஸாரின் தடுப்புக்காவல் கொலைகளுக்கு எந்தவொரு இடத்திலும் நீதி நிலைநாட்டப்படவில்லை. இங்கும் நீதி நிலைநாட்டப்படாது போய்விடும் என்ற அச்சம் தான் எமக்கு எழுகின்றது.

பொலிஸ் திணைக்களம் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் ஓர் அரசாங்க திணைக்களமாக இதுவரையில் செயற்படவில்லை. சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் திணைக்களமாகவும், தனது எஜமானர்களைத் திருப்திப்படுத்தும் திணைக்களமாகவுமே செயற்பட்டிருக்கின்றது. அவ்வாறானதொரு திணைக்களம் தமிழ் இளைஞனின் உயிரிழப்புக்கு நீதியைப் பெற்றுதரும் என்பதில் துளியும் நம்பிக்கை இல்லை.

இளைஞன் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார் என்பதை அவரது வாக்குமூலம், உறவினர்களின் வாக்குமூலம், உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை என்பன உறுதிப்படுத்துகின்றன. இந்த ஆதாரங்களும், மருத்துவ அறிக்கையும் சாதாரணமானவையல்ல.

இந்தச் சம்பவத்தால் எழுந்துள்ள அதிர்வலைகளையடுத்து பொலிஸார் இருவர் விசாரணைக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அது ஆரம்ப நடைமுறை என்றாலும், தற்போதைய கொதிப்பை அடக்குவதற்கான யுக்தியாக அது மாறிவிடக்கூடாது.

மக்களின் கொந்தளிப்பு அடங்கியதும் அதை அப்படியே கிடப்பில்போட்டு விட்டு தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் தொடர்வதற்கு பொலிஸ் திணைக்களம் உடந்தையாக இருந்து வரும் நிலையில் இங்கேயும் அவ்வாறான தொரு நிலைமை வராமல் நாம் கண்காணித்துக்கொள்ளவேண்டும்.

மாணவி வித்தியா விவகாரத்தில் மக்களின் அழுத்தங்களால் நீதித்துறை விரைந்து எவ்வாறு நீதியை நிலைநாட்டியதோ அதேபோன்று இந்த இளைஞனின் உயிரிழப்புத் தொடர்பிலும் நீதி நிலைநாட்டப்படும் வரையில் நாம் தொடர்ந்து குரல்கொடுத்துக் கொண்டிருக்கவேண்டும் - என்றுள்ளது. (அ-ஒ-125)

## பல்கலை...

இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சாற்றுதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தத் தூபி பல்கலைக்கழக மாணவர்களால் சேகரிக்கப்பட்ட நிதியிலிருந்து தான் அமைக்கப்பட்டது என்பதற்கான ஆதாரத்தைச் சமர்ப்பிக்குமாறும் ஆணைக்குழு கோரியுள்ளது.

இந்தத் தூபி தொடர்பில் கையாளப்பட்ட நிதி விவரங்கள் மற்றும் பெறப்பட்ட அனுமதிகள் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் உட்பட 3 பேர் மேற்கொண்ட முறைப்பாடுகளையடுத்து இது தொடர்பிலான புலனாய்வு விசாரணைகளை ஆரம்பித்துள்ள ஆணைக்குழு கடந்தமாதம் 7ஆம் திகதி பல்கலைக்கழக அதிகாரிகளை விசாரணைக்கு அழைத்ததோடு பல்கலைக்கழகத்தினுள் இத்தகைய தூபி அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கமளிக்குமாறும் கோரியிருந்தது.

இது தொடர்பான விசாரணைக்குச் சென்றிருந்த பல்கலைக்கழகப் பதிவாளர், தூபி அமைப்பது தொடர்பில் அன்றைய நிலையில் பல்கலைக்கழகத்துக்கு இருந்த அவசியம் தொடர்பில் விரிவான அறிக்கையினைச் சமர்ப்பித்ததுடன் தூபி அமைப்பதற்காகப் பெறப்பட்டிருந்த முறையான அனுமதிகளையும் வழங்கியிருந்தார். தூபி அமைப்புக்கு பொது நிதி பயன்படுத்தப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்களையும் சமர்ப்பித்திருந்தார்.

இந்த நிலையில் தூபி அமைப்பதற்கான நிதி, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் சேகரிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான ஆவணங்களுடன் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரை எதிர்வரும் 4ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு எழுத்துமூலம் பல்கலைக்கழகத்துக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## பொலிஸ்...

கரியங்களை எதிர்கொண்டனர். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்பாளர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சுமார் ஒரு மணிநேரம் விசாரணைகளை முன்னெடுத்தார். (அ-ம-125-27)

## வட்டுக்கோட்டை...

யில் நேற்றுமுதல் பணி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மூத்தபொலிஸ்அத்தியட்சகர்தெரிவித்தார். சந்தேகநபர் ஒருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்திருந்தார். இது தொடர்பில் விசேட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவின் விசாரணைக்கு அமைவாகவே இரண்டு பொலிஸார், யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகத்துக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் மாத்தர ஆராய்ச்சி, தமிழ் பொலிஸ் கொன்ஸ்டபிள் செல்வகுமார் ஆகியோரே இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர். (அ-ஒ-20-26-125)

## தலையற்ற...

திகதி சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இவர் கடந்த 12ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ளதாக அவரது மகனால் கடந்த 15ஆம் திகதி முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த 14ஆம் திகதி பொன்னாலையிலுள்ள கிராம அலுவலரின் அலுவலகக் கண்ணாடியை ஒருவர் உடைக்க முயல்வதாக கிராம அலுவலருக்கு தகவல் வழங்கப்பட்டது. அவர் உதவிப் பிரதேச செயலர் ஊடாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தார். பொலிஸார் அங்குசென்று அவரைப் பிடித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் வினவியபோது; அந்த நேரத்தில் தான் விடுமுறையில் இருந்ததாகவும், காமினி என்பவரே பொறுப்பாக இருந்ததாகவும் பதிலளித்தார். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்ட காமினி என்ற பொலிஸாரிடம் வினவியபோது, தான் விடுமுறையில் அந்தநேரம் நின்றிருந்ததாகவும், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியே கடமையில் இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

சம்பந்தப்பட்டவரை பொலிஸார் கைது செய்தனரா? தடுத்து வைத்திருந்தனரா? அவர் பொன்னாலை காட்டுப் பகுதியில் எப்படிச் சடலமாக மீட்கப்பட்டார் என்ற கேள்விகளுக்குப் பதில் இதுவரை வெளியாகவில்லை.

இதேவேளை - மேற்படி நபர் புத்தி சுவாதீனம் உடையவர் என்று ஊடகங்களில் வெளியான தகவல்களை இறந்தவரின் பிள்ளைகள் மறுத்துள்ளனர். (அ-ஒ-27-125)

## மாவீரர்...

பட்டுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் கோபிநாத் உள்ளிட்ட மூவருக்கு எதிராகத் தெல்லிப்பழைப் பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமாலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது சட்டத்தரணிகளான க.சுகாஷ்,தாட்சாயினி, அபிராமி, நீதன், பார்த்தீபன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகி வாதங்களை முன்வைத்தனர். இதனையடுத்து நீதிமன்று மாவீரர் நாளுக்குத் தடைவிதிக்க மறுத்தது.

இதேவேளை - மாவீரர் நாளுக்குத் தடைகோரி கடந்த வெள்ளியன்று மல்லாகம் நீதிமன்றத்தில் மானிப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸாரின் கோரிக்கை கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-66-100)

## கார்த்திகைப்...

கூடாது என கிளிநொச்சி பொலிஸார் அறிவுறுத்தியதாக தமிழ்த் தேசிய இளைஞர் பேரவையின் தலைவர் வ.நகுலன் தெரிவித்துள்ளார். (அ-ஒ-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கடலில் உரிமையை வென்றெடுக்க ஒன்றுபடுவோம்

## சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு மீனவர்களிடம் கோரிக்கை!

யாழ்ப்பாணம், நவ. 21

சர்வதேச மீனவர் தினம் இன்று கடைப் பிடிக்கப்படும் நிலையில் எங்கள் கடலில் எங்கள் உரிமையை வென்றெடுக்க வடக்கு - கிழக்கு கடற்றொழிலாளர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக ஓரணியில் அணி திரள வேண்டும் என யாழ். மாவட்ட க.தொ.கூ.ச.சமாசங்களின் சம்மேளனத் தின் முன்னாள் தலைவர் அ. அன்ன ராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

உலக மீனவர் தினம் இன்று கொண்டா டப்பட உள்ளது. கடல் மேல் மீனவர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்ற தொனிப்பொருளிலே வடக்கு-கிழக்கு கடற்றொழிலாளர்கள் ஒன்றுபட்டு ஒற்று மையாக எமது தமிழ் கடல் மீது இருக் கின்ற உரிமைகளையும் எங்களது வாழ் வாதாரத்தையும் வென்றெடுக்க ஒன்றுபட வேண்டும்-என்றார். (அ-ஒ-100)

## தரமற்ற மருந்து இறக்குமதி: 4 உயர் அதிகாரிகள் கைது

கொழும்பு, நவ. 21

தரமற்ற இமியுநோக்லோபியுலின் ஊசி மருந்துகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப் பிரிவின் நான்கு உயர் அதிகாரிகள் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தால் (சி.ஐ.டி.) நேற்றுக் கைது செய் யப்பட்டுள்ளனர். (அ-ஒ,இ)

## செயலமர்வு

சாவகச்சேரி, நவ. 21

கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் பொறியியல் தொழில்நுட்ப பாடத்திட்டத் துக்குத் தோற்றும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட மாணவர்களுக்கான செயலமர்வு நாளை தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி வரையில் காலை 8 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணிவரை புனித பத்திரிசியார் கல்லூரியில் நடத்தப்படவுள் ளது. (ஒ-131)


### தேவை

யாழ் நகரில் இயங்கும் கையடக்கத் தொலைபேசி நிலையத்திற்கு
- விற்பனையாளர்
- திருத்துனர்

பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்
வயதெல்லை : 18 - 21
சம்பளம் : 25,000 - 30,000/-
077 199 6117
CS 27643 (AK-1)

### வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் சுப்பர்மார்க் கட்டுக்கு வேலையாட்கள் தேவை.
**காசாளர்** - கணினி தெரிந்தவர்கள் (பெண்கள்)
**பொதி செய்பவர்கள்** - பெண்கள்
தொடர்பு: **077 355 1631**
**T.T.R.Supermarket**
**85,87, Rakka Road, Jaffna.**


# மரண அறிவித்தல்

மலர்வு 01 . 10 . 1927



உதிர்வு 19 . 11 . 2023

## சிவச்செல்வம் சரஸ்வதி

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகவும் Sittard, Netherland ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவச்செல்வம் சரஸ்வதி அவர்கள் (19.11.2023) அன்று நீண்டகால வாழ்வை நிறைவு செய்துகொண்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசம்மா தம்பதியினரின் புதல்வியும், காலஞ்சென்ற சின்னையா சிவச்செல்வம் அவர்களின் அன்புமனைவியும், காலஞ் சென்றவர்களான AK.நடராஜா, AK.சிவப்பிரகாசம், தவமணிதேவி மற்றும் AK.இரட்ண வடிவேல் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவகுமாரன், செல்வகுமாரன், சூரியகுமாரன், நந்தகுமாரன், இந்துமதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிந்துபைரவி, பிரவீணா, நிலானா, அபிராமி, நிரோஷா, பிரஷாந், நிஷானா, பகீரதி, அஞ்சனா, கீர்த்தனா ஆகியோரின் பாட்டியும், அர்ஜுணன், கர்ணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், கந்தப்பிள்ளை வசந்தி, கணேசமூர்த்தி வசந்தி, குகனேஸ்வரி, சத்யரேகா, மனோகரி, காலஞ்சென்ற கருணைராஜ், Rob ஆகியோரின் மாமியும் ஆவார்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.**

**தகவல்: குடும்பத்ததினர்**

தொடர்புகளுக்கு:

| | | |
|---|---|---|
| சிவகுமாரன் | (இங்கிலாந்து) | + 44 757 893 7077 |
| செல்வகுமாரன் | (கனடா) | +1 416 450 2456 |
| சூரியகுமாரன் | (சுவிஸ்) | +41 79 541 1240 |
| நந்தகுமாரன் | (அவுஸ்திரேலியா) | + 61 430 44 8337 |
| இந்துமதி | (நெதர்லாந்து) | +31 61 60 58 905 |
| Rob | (நெதர்லாந்து) | +31 62 50 37 655 |

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் சிதம்பரநாதன்

(முன்னாள் ஊழியர், தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை)



பிறப்பு 21.11.1949 — இறப்பு 20.11.2023

சங்கரத்தையை பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட, சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலய அறங்காவலர்களில் ஒருவரான சோமசுந்தரம் சிதம்பரநாதன் நேற்று (20.11.2023) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் மகேஸ்வரி தம்பதி களின் ஏகபுதல்வனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், ஜெயவதியின் அன்புக்கணவரும், ஆதவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலிகாமம் மேற்கு பி.ச), ஆதீசன் (முகாமையாளர், கொமர்ஷல் வங்கி வாழைச்சேனை), ஆரணி (ஆசிரியை, யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), ஆரதி (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவுத் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கைலர் (எச்.ஏ மல்ரி ஸ்பொட் உரிமையாளர்), சிவகிருஷ்ணன் (ஆசிரியர், யா/வியாவில் சைவ வித்தியாலயம்), யாழினி (A.S.I உரிமையாளர்), லக்சிகா (H.N.B நெல்லியடி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், டர்ஜன், ஆசிகுகன், ஆதிகேஷ், ஆதிரா, பிரணவி, ஆத்மிகா, ஆதிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 248 7024**
**021 205 1327**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 27047) S-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.